நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் :23.07.2021

2021-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 23.07.2021-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

சத்தியமங்கலம் வட்டம் நில வருவாய் வட்டாட்சியர், சத்தியமங்கலம் அவர்களின் கடிதத்தில் கோட்டுவீராம்பாளையம் கிராமம், மஜரா காளிங்கராயன்பாளையம்புதுார் என்ற முகவரியில் வசித்து வரும் ஆறுமுகம் மனைவி சிவகாமி என்பவருக்கு மேற்படி கிராமம் புதிய க.ச.எண்.54/2A1A3 மற்றும் வரதம்பாளையம் கிராமம் புதிய க.ச.எண்.221/2B2,220/1 நெ.காலைகளில் உள்ள பூமியானது சத்தியமங்கலம் சார்பதிவகம் ஆவண எண்.835/2021 நெ தான செட்டில் மெண்ட் பத்திரபடி பாத்தியப்பட்டுள்ளது.எனவும்,கோட்டுவீராம்பாளையம் கிராமம் க.ச.54/2A1A3 காலையிலுள்ள பூமியான கிணற்றிலிருந்து வாரி,சாலை,பாதை ஆகிய புறம்போக்கு மற்றும் பட்டா காலைகளில் கோட்டுவீராம்பாளையம் கிராமம் க.ச.எண்.54/2A1A3,82/1 பாகம், 83/1 பாகம்,78 பாகம், 78/1, 78/7,77,76,72,73,68/2, 12,13/1 பாகம், 13/5 பாகம்,19 பாகம், 18 பாகம், 9/4,20,8/1,8/2,5/3,7/1,7/2,292,293,294 வரதம்பாளையம் கிராமம் புதிய க.ச.எண்.222/1,247/2, 221/2B2,220/1,220/2,220/3 நெ வழியே குழாய் பதித்து தண்ணீர் எடுத்து செல்ல வரதம்பாளையம் கிராமம் புதிய க.ச.எண்.222/1,221/2B2,220/1,220/3 நெ காலையில் உள்ள பூமிக்கு பாதைவரி அனுமதி வழங்க கோரி வரப்பெற்ற விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம் .

(கட்டு எண். 577/2021/இ1)

தீர்மானம் எண் : 643 அனுமதிக்கப்பட்டது. நாள் 23.07.2021

**பொருள் : 2**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட பழைய பேருந்து நிலையம், மற்றும் புதிய பேருந்து நிலைய கடை இனம் வரும் 31.07.2021 மற்றும் 31.08.2021-ஆம் தேதியுடன் உரிமம் காலம் முடிவடைவதால் அரசாணை எண்.(நிலை) 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) துறை நாள்.03.07.2007-ன் படி மேலும் நீடித்து கொள்வது குறித்து விருப்ப படிவம் பெறப்பட்டது. அதன்படி உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச தொகை மற்றும் முன் வைப்புத் தொகைகள் பெறப்பட்டதை தொடர்ந்து நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் 01.08.2021, 01.09.2021-ஆம் தேதிகளிலிருந்து மூன்றாண்டு முடிய அதே உரிமைதாரருக்கு நீடிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | விதிப்பு எண் | கடை ஏல உரிமதாரர் பெயர் | பழைய மாத வாடகை | 15% உயர்வு செய்த பின் மாத வாடகை | நீடிப்பு செய்து வழங்கும் வாடகை காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | புதிய பேருந்து நிலைய கடை | 11 | 061/BD01/00016 | எஸ்.கார்த்திக் | 6,100/- | 7,015/- | 01.09.2021 முதல் 31.08.2024 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2. | பழைய பேருந்து நிலைய கடை | 1 | 061/3085 | சி.சுரேஷ் | 27,600/- | 31,740/- | 01.08.2021 முதல் 31.07.2024 |

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. மேற்காணும் புதிய பேருந்து நிலையம், மற்றும் பழைய பேருந்து நிலைய கடையினம் வரும் 31.07.2021 மற்றும் 31.08.2021-ஆம் தேதியுடன் முடிவடைவதையொட்டி, மேலும் அரசாணை எண்.92-ன் படி உரிய உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன் வைப்புத் தொகைகள் பெறப்பட்டது. எனவே மேற்கண்ட கடைகளுக்கு அரசாணை எண். 92-ன் படி நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் நீடிப்பு செய்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. 01.08.2021-ஆம் தேதி முதல் கடைகள் உரிமம் புதுபித்து உத்திரவிடப்பட வேண்டியுள்ளதால் நகர்மன்ற முன்அனுமதி பெறப்பட்டு மேற்காணும் 2 கடைகளையும் உரிமம் புதுபிக்க மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 1200/2020/அ3)

தீர்மானம் எண் : 644 அனுமதிக்கப்பட்டது. நாள் 23.07.2021

பொருள் : 3

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வாகனங்கள் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், பேருந்து நிலையத்தில் கட்டணம் கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம், பேருந்து நிலையத்தில் ஒளி, ஒலி விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம், பழைய பேருந்துநிலைய கடை எண்ணிக்கை -11, கச்சேரிவீதி, சத்திரக் கடை எண்ணிக்கை - 26, புதிய பேருந்து நிலைய கடை எண்ணிக்கை -5 ஆகியவை நகர்மன்ற தீர்மான எண். 893, 948, 949,255 மற்றும் முன் அனுமதி தீர்மானங்களின் படி மேற்கண்ட எண்ணிக்கை கொண்ட கடை இனங்களை 07.07.2021-ஆம் தேதி பொது ஏலம் விடப்பட்டதில கீழ்க்கட்ணடவாறு நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறுப்பட்டது. கீழ்க்ண்ட இனங்கள் மட்டும் அரசாணை எண்.92-ன் படி, சந்தை மதிப்பு மற்றும் சர்கார் மதிப்பு மற்றும் குழு நிர்ணயத்த மன்ற அனுமதியின் படி ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக வரப்பெற்றுள்ளதால் இதனை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | ஏலதாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்ற மாத வாடகை ரூ. | உரிமக் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலையம் | 4 | பா.ஆயிஷா பாசில் | 11,040/- | 01.08.2021 முதல் 31.07.2024 வரை |
| 2 | பழைய பேருந்து நிலையம் | 7 | எஸ்.ராமச்சந்திரன் | 8,395/- | 01.08.2021 முதல் 31.07.2024 வரை |
| 3 | பழைய பேருந்து நிலையம் | 28 | ந.சண்முகம் | 4,000/- | 01.08.2021 முதல் 31.07.2024 வரை |
| 4 | கச்சேரி வீதி சத்திரக்கடை | 19 | ஷேக் அப்துல் வாஹித் | 17,500/- | 01.08.2021 முதல் 31.07.2024 வரை |

அலுவலகக்குறிப்பு :-

1.மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் கடைகள் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இதில் மேற்கண்ட வரிசை எண்.1 முதல் 4 வரை உள்ள கடை இனங்கள் அரசாணை எண். 92-ன்படி மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச மாத வாடகை காட்டிலும் கூடுதலாகவும் சந்தை மதிப்பு மற்றும் சர்கார் மதிப்பு காட்டிலும் கூடுதலாகவும் மாத வாடகை சென்றுள்ளதால் மேற்கண்ட ஏலதாரரின் உயர்ந்தபட்ச மாத வாடகையினை அரசாணை எண். 92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளின் படி உறுதி செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

2. 01.08.2021-ஆம் தேதி முதல் கடைகள் உரிமம் உத்திரவிடப்பட வேண்டியுள்ளதால் நகர்மன்ற முன்அனுமதி பெறப்பட்டு மேற்காணும் 4 கடைகளையும் மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 1200/2020/அ3)

தீர்மானம் எண் : 645 அனுமதிக்கப்பட்டது. நாள் 23.07.2021

பொருள் : 4

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.9 ஆண்டவர் நகர்,ஐயப்பா நகர்,ஆசிரியர் காலனி (அண்ணா நகர்) மற்றும் வார்டு எண்.27 M.K.லேஅவுட்,கம்பத்ராயன் புதூர், கோட்டுவீரம்பாளையம் மாசானி பத்திரகாளியம்மன் கோவில் எதிரில் ஆர்.கே.நகர், கடடபொம்மன் நகர் (பாரஸ்ட் டிப்போ கிழக்கு வீதி , சுசீந்திரன் லேஅவுட் , இந்திரா நகர், SMZ Avenue ஆகிய பகுதிகளில் தெருவிளக்கு வசதிகள் இல்லாமல் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள்.இந்நகர் மன்ற தீர்மானம் எண்.498/31.12.2020 மற்றும் 439/30.9.2020 இன்படி மேற்கண்ட பகுதியில் தெருவிளக்கு அமைக்கும் பொருட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மட்டும் தொகை செலுத்த மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.இந்நிலையில் மேற்க்ணட பகுதகளில் உத்தேசமாக 70 விளக்குகள் தேவைப்படுகிறது.இந்த 70 லைட்டுகள் மற்றும் அதன் சார்ந்த உபகரணங்கள் தற்பொழுதுள்ள இயக்க மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிறுவனத்தில் PPP mode வாங்கி கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.இந்த 20 வாட்ஸ் லைட்டு மற்றும் அதன் சார்ந்த உபகரணங்கள் கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் **ரூ.3.00 இலட்சம்** ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியல் சேர்த்து கொள்ளலாம்.

(ந.க.எண். 62/202/இ1)

தீர்மானம் எண் : 647 அனுமதிக்கப்பட்டது. நாள் 23.07.2021

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் : 27.07.2021

2021-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 30.07.2021-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் ஜீலை 2021-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 647 பதி வு செய்யப்பட்டது. நாள் 30.07.2021

**பொருள் : 2**

இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை 2021-ம் மாத மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 648 பதி வு செய்யப்பட்டது. நாள் 30.07.2021

**பொருள் : 3**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்.1,2,17 முதல் 22 வரையுள்ள பகுதிகளில் 50 தனியார் துாய்மைப் பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது. 30.06.2021 தேதியன்று ஒப்பந்த காலம் முடிவடைகின்றது. எனவே 50 துாய்மைப் பணியாளர்கள் மட்டும் 6 மாதம் காலத்திற்கு வார்டு எண். 1, 2, 17 முதல் 22 வரையுள்ள பகுதியில் வீடு வீடாக குப்பை வாங்குதல், சாலை/தெரு கூட்டுதல், பொதுக்கழிப்பிடம் சுத்தம் செய்தல், கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்தல், RRC மற்றும் MCC பணிகள் மேற்கொள்ள தனியார் வசம் ஒப்படைப்ப செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு ரூ. 56,00,000/- க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. துாய்மைப் பணியாளர்கள் பற்றாக்குறையினால் பொது சுகாதாரம் பாதிக்கப்படாமல் இருக்க பொது சுகாதார நலன் கருதி, திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 465/2021/எச்.1)

தீர்மானம் எண் : 649 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

**பொருள் : 4**

படிக்கப்பட்டவை : இவ்வலுவலக செயல்முறை ந.க.எண். 465/2021/எச்.1 நாள். 02.06.2021 சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு ஒப்பந்த அடிப்படையில் 50 துாய்மைப் பணியாளர் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பராமரிக்கும் பணிகளை Outsourcing ஒப்படை செய்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு இரு மொழிகளில் ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ் Time of India Chennai Dipr No. 1677/Tender/2021 Date. 05.06.2021 மற்றும் செ.ம.தொ.இ.1677/ஒப்பந்தப்புள்ளி/2021 நாள்.05.06.2021 அன்று செய்தி மலரில் வெளியிடப்பட்டது. நிர்வாக காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற இரு மொழிகளில் ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ் Times of India Chennai Dipr No.

1690/Tender/2021 Date. 08.06.2021 மற்றும் செ.ம.தொ.இ.1690/ஒப்பந்தப்புள்ளி /2021 நாள். 08.06.2021 அன்று இரத்து அறிவிப்பு தினசரி செய்தி மலரில் வெளியிடப்பட்டது. மேலும் நாளிதழில் வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கான "ரவி பப்ளிசிட்டி சர்வீஸ" கீழ்காணும் பட்டியல் தொகை வழங்க கோரியுள்ளார்.

| வ. எண் | செய்தி மலரில் | Invoice No | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Times of India Chennai<br>தமிழ் முரசு | Invoice No. Rps/21-22/000067 | 30739/- |
| 2 | Times of India Chennai<br>தமிழ் முரசு | Invoice No. Rps/21-22/000070 | 12296/- |
| | | மொத்தம் | 43035/- |

மேற்படி பட்டியலில் காணும் தொகையை வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**
1.நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2.பொது சுகாதாரப் நலன் கருதி திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 465/2021/எச்.1)

தீர்மானம் எண் : 650 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 5

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், த/பெ. எ. ராக்கியா கவுண்டர் என்பவர், கோட்டு வீராம்பாளையம் கிராமம், நகரளவு வார்டு - எ, பிளாக்கு -2, நகரளவு எண். 6/6, க. ச. எண். 28/2 பி 3 - ல் 0.51 ஏக்கர் (அ) 2065.00 ச.மீ பரப்பளவில் உள்ள இடத்தினை மனைகளாக பிரித்து மனைப்பிரிவு அமைக்க நகராட்சி ஆணையாளர் வழியே ந. க. எண். 1153/2019/எப்1 நாள். 04.11.2019-இன்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு பரிசீலனைக்காக அனுப்பப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தினை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் கடிதம் ந. க. எண்.490/2020/ஈமா 2 நாள்.29.08.2020 இன்படி பொது உபயோக இடம், சாலை மற்றும் மூலை முடக்குகளுடன் கூடிய உத்தேச மனைப்பிரிவின் சாலை அமைப்பு மற்றும் பொது உபயோக இடம் ஆகியவற்றினை அங்கீகரித்து அடிப்படை வசதிகள் செய்து நகராட்சி பொறியாளரின் சாலைகள் மற்றும் அடிப்படை வசதிகள் தரமாக அமைக்கப்பட்டுள்ளது என சான்று பெற்று மன்றத் தீர்மான நகல், சாலை அமைப்பு புகைப்படம், தான பத்திரம் மற்றும் பத்திர பதிவு துறையின் மூலம் பதிவு பெற்ற பின் ஆணையாளர் பெயருக்கு சாலை, பொது உபயோக இடம் ஒதுக்கீட்டுக்கான தான பத்திரத்தின்படி வில்லங்கச் சான்றுடன் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு நகராட்சி பொறியாளரின் 23.10.2020-இன் குறிப்பில் கண்டுள்ளவாறு மனுதாரர் தனது சொந்த செலவில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 175, 176, 177,178 மற்றும் 179 இன்படி அடிப்படை வசதிகள் செய்து தான ஆவணம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைக்க அறிவிப்பு ந. க. எண். 1153/2019/எப் 1 நாள். 23.10.2020- இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரரின் உத்தேச இடத்தினை ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரரின் உத்தேச இடம் அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்ட கலப்பு குடியிருப்பு பகுதியில் உள்ளது. உத்தேச இடத்திற்கு அணுகு சாலையாக பண்ணாரி செல்லும் பிரதான சாலையான N.H. 209 தேசிய நெடுஞ்சாலையாக அமைவதாலும், மேற்கண்ட இடத்தினை நகர் சார் ஆய்வாளர், சத்தியமங்கலம் அவர்களால் புலத்தணிக்கை செய்து வார்டு- எ, பிளாக் -2, நகரளவு எண். 6/6, க. ச. எண். 28/2, 2B, 2B3 -இல் 0.51 ஏக்கர் பரப்பளவு உள்ள இடம் திரு. எஸ். ஆர் பாலசுப்பிரமணியம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும் ச புற இடத்திலோ, அருகில் உள்ள பட்டாதாருக்கு சொந்தமான இடத்திலோ ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்றும், மேற்கண்ட இடம் சம்பந்தமாக புகார் மனு ஏதும் வரப்பெறவில்லை என தனது 5/05/2021 ஆம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் சமர்ப்பித்துள்ள அரசு வழக்குரைஞர் 25.09.2019 இல் சட்டக்கருத்துருவின் சொத்து தொடர்பான சொத்து விபரத்தினை பரிசீலனை செய்ததின் அடிப்படையில் மேற்கண்ட சொத்து சம்பந்தமான சிவில் மற்றும் கிரிமினல் வழக்கு சம்பந்தமாகவோ, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு மனுக்கள் ஆகிய வழக்குகள் நிலுவையில் ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மேற்கண்ட மனைப்பிரிவில் நகராட்சி பொறியாளரின் அறிவிப்பின்படி, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறு சாலை, பொது உபயோக இடம், மூலை முடக்கு, தொழில் நுட்ப அனுமதி

வழங்கப்பட்டுள்ளதின்படி தார்சாலை, குடிநீர் வசதி, தெருவிளக்கு சிறந்த முறையில் தரமாக அமைக்கப்பட்டுள்ளது.மேலும் சிமெண்ட் கான்கிரீட்டில் மழைநீர் வடிகால் தரமாக அமைக்கப்பட்டுள்ளது. குடிநீர் குழாய் 3”ø pipe சாலை முழுவதும் அமைக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவிற்கு அனைத்து அடிப்படை கட்டமைப்புகள வசதிகள் தரமாக அமைக்கப்பட்டுள்ளது என தனது 19.05.2021- இல் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு அனுமதி கட்டணம் ரூ.3300/- அபிவிருத்திக்கட்டணம் ரூ. 8,100/- உட்பிரிவு கட்டணம் ரூ. 750/- மனைப்பிரிவு Reclassification Fess ரூ. 20,000/- ஆகிய கட்டணங்கள் நகராட்சி கருவூலகத்தில் இரசீது எண். 061/01/01/19-20/0006008, 6009 நாள். 25.10.2019- இல் செலுத்தியுள்ளார்.

மேற்கண்ட மனைப்பிரிவிற்கு மின் வசதிக்காக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் லிமிடெட், கோபி, மின் பகிர்மான வட்டத்தில் மனுதாரரால் இரசீது எண். 367005484 நாள். 22.02.2021 இல் ரூ. 1975/- தொகையினை செலுத்தி அதன் விவரத்தினை சமர்ப்பித்துள்ளார்.

மேலும் சத்தியமங்கலம், வட்டாட்சியர் அலுவலகம், நகரசார் ஆய்வாளர் அவர்கள் தனது 05.05.2021-ம் தேதிய குறிப்பில், புலத்தணிக்கை செய்ததில், கோட்டுவீராம்பாளையம் கிராமம், வார்டு -எ, பிளாக் -2, T.S.No. 6/6 என்ற இடம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் கொள்கை அளவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறு நிலையில் உள்ள தென்வடல் மேற்குபுறம் உள்ள சாலையில் கூடுதலாக 0.9 மீ சாலையுடன் சேர்த்து 7.0 மீ சாலையாக உள்ளது என்றும், மேலும் நிலையிலுள்ள தனவாசி தென்வடல் ந. அ. எண். 7/1, 7/2, 7/3 மற்றும் மேற்குபுறம் உள்ள 6.10 மீ நிலையிலுள்ள நகரளவு எண். 6/3 இல் உள்ள சாலைகள் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார்

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் வழங்கப்பட்ட வரைபடத்தில் உள்ள சாலை, பொது உபயோக இடம் மற்றும் TANGEDCO இடம் ஆகியன தனித்தனியே பொது உபயோக இடம் 19.56 ச. மீ, மின் வாரியத்திற்கு, 20.20 ச. மீ மனைப்பிரிவு சாலையின் பரப்பளவு 103.82 ச.மீ என தான ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட மனைப்பிரிவிற்கு பொறியாளர் அவர்களின் குறிப்பு19/5/2021 இன்படியும், நகர சார் ஆய்வாளர் அவர்களின் 05/05/2021 தேதிய குறிப்பின்படியும், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் 29.08.2020 இல் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள சாலை, பொது உபயோக இடம், மேற்கண்ட மனுதாரர் சமர்ப்பித்துள்ள தான பத்திரத்தினை சார் பதிவாளர் அலுவலகம், சத்தியமங்கலம் அலுவலகத்தில் பத்திரப் பதிவு செய்யவும், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் அங்கீகாரம் செய்யப்பட்ட சிறப்பு மற்றும் பொது நிபந்தனையுடன் விற்பனை செய்ய மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்க நகர்மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 1153/2019/எப்1)

தீர்மானம் எண் : 651 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

**பொருள் : 6**

சத்தியமங்கலம் நகராட்சிப்பகுதியில் வார்டு எண். 12-இல் வடக்குப்பேட்டை ரோட்டில் இயங்கி வரும் BSNL தொலைபேசி நிறுவனம் சொத்துவரி விதிப்பு எண். 061/012/00087 பழைய வரி விதிப்பு எண். 061/13087, சொத்துவரி நிலுவையினை சென்னை உயர்நீதி மன்றம் ரீட் மனு எண். 12962/2012-ன் தீர்ப்பின்படி மற்றும் நகராட்சி வழங்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களின 07.09.2020-ன் கருத்துரு கடிதத்தின்படி தொலைபேசி நிலையம் BSNL நிறுவனம் 17.04.2011-ம் தேதி முதல் BSNL நிறுவனத்தின் மூலம் சொத்துவரி வசூலிக்க உகந்தது என்று, இதற்கு முந்தைய காலங்களில் உள்ள சொத்துவரியினை வசூலிக்க தகுதியற்றது என தீர்ப்பாணை மற்றும் நகராட்சி அரசு வழக்கறிஞர் கருத்துருவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2011-2012ம் ஆண்டு முந்தைய காலங்களில் சொத்துவரி தள்ளுபடி செய்ய நகர மன்ற தீர்மானம் எண். 444 நாள். 30.09.2020- ல் அனுமதிக்கப்பட்டது. இதில் முந்தைய காலத்தில் 2001-2002-ம் ஆண்டு நிலுவை ரூ.84548/-க்கு பதிலாக ரூ.42227/- என தவறுதலாக கேட்பு குறிப்பிட்டு தள்ளுபடி தீர்மானம் பெறப்பட்டது. இதில் வித்தியாச நிலுவை தொகை ரூ.42,321/- விடுப்பட்டதை சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பின்படியும் வழக்கறிஞர் சட்ட கருத்துருவின் (Legal Opinion) படியும் ரூ.42321/- ஐ நிலுவை கேட்பு பதிவேட்டில் இருந்து தள்ளுபடி செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வரி விதிப்பு எண் | நிலுவை ஆண்டு | நிறுவனத்தின் பெயர் | தள்ளுபடி செய்ய வேண்டிய நிலுவை தொக ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 061/012/00087<br>061/13087 | 2001-2002 | தொலை தொடர்பு நிறுவனம் (BSNL) | ரூ.42321/- |

அலுவலகக்குறிப்பு :

சென்னை உயர் நீதிமன்ற ரீட் மனு எண்.12962/2012 மற்றும் வழக்கறிஞர் கருத்துருவின்படி நகரமன்ற தீர்மானம் எண். 444 நாள். 30.09.202-ன்படி விடுபட்ட நிலுவை சொத்துவரி ரூ.42321/- ஐ சொத்துவரி நிலுவை கேட்பு பதிவேட்டில் இருந்து தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 2639/2012/அ1)

தீர்மானம் எண் : 652 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 7

அரசாணை எண். 150, நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் துறை 19.11.2019-ன்படி சொத்துவரி சீராய்வினை நிறுத்தி வைத்து பழைய வரிவிதிப்பு அடிப்படையில் சொத்துவரி வசூலிக்க தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையில், சொத்துவரி வசூலினை 2019-2020 இல் நடைமுறைப்படுத்த அறிவுரை வழங்கப்பட்டது. மேற்கண்ட அரசாணையினை நகர மன்ற தீர்மான எண்.224, நாள்.21.11.2019-ல் பதிவு செய்து தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் 2018-2019 முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு பொது சொத்துவரி சீராய்வில் உயர்த்தப்பட்ட சொத்துவரியினை மேற்கண்ட அரசாணையின்படி, 2019-2020 ம் ஆண்டில் கணினியில் ஏற்றப்பட்ட வரியினை குறைக்கப்பட்டு பழைய வரிவிதிப்பின் அடிப்படையில் வரிகுறைப்பு செய்யப்பட்டு தற்போது வரை வசூலிக்கப்பட்டு வருகிறது. திருத்தப்பட்ட புதியதாக சொத்துவரியினை அதிகமான வசூலிக்கப்பட்ட வரியினை சம்மந்தப்பட்ட வரிவிதிப்பாளர் கணக்கில் சரிகட்டப்பட்டது. இந்நிலையில் அரசாணை எண். 73,76 ன்படி 2018-2019-ம் ஆண்டு பொது சொத்துவரி சீராய்வில் உயர்த்தப்பட்ட கேட்பினை அரசாணை எண். 150-ன்படி பழைய வரி விதிப்பு அடிப்படையில் சொத்துவரி வசூலிக்க உத்தரவிட்டதை தொடர்ந்து 2018-19 ம் ஆண்டில் புதிய சொத்துவரி சீராய்வின்படி நிலுவை ஏற்படுத்தப்பட்ட கேட்பினை கணினி (online) வாயிலாக குறைக்கப்பட்டது. ஆனால் நிலுவை கையேடு பதிவேட்டின்படி 2018-2019 இல் சீராய்வு செய்யப்பட்ட சொத்துவரியினை தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதனை அரசாணை எண். 150-ன்படி கீழ்க்கண்ட பொது சீராய்வில் நிறுத்தி வைக்கப்பட்ட பழைய வரியினை நடைமுறைப்படுத்துவது குறித்து சீராய்வில் உயர்த்தப்பட்ட சொத்துவரி ரூ.229229/- ஐ நிலுவை கேட்பு பதிவேட்டில் இருந்து தள்ளுபடி செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு | வரிவிதிப்பு எண் | துறையின் பெயர் நிலுவை ஆண்டு | தள்ளுபடி செய்யப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 1 | 00339 | Fire Service 2018-2019 | 5452/- |
| 2 | 10 | 00048 | Forest Office 2018-2019 | 17176/- |
| 3 | 11 | 00766 | Police 2018-2019 | 9872/- |
| 4 | 12 | 00087 | BSNL 2018-2019 | 73612/- |
| 5 | 15 | 00286 | லியாகத்துல்லா 2018-2019 | 60/- |
| 6 | 21 | 00361 | தண்டபாணி 2018-2019 | 418/- |
| 7 | 21 | 00362 | நாகேந்திரன் 2018-2019 | 570/- |
| 8 | 22 | 00005 | வேணு கோபால்சாமி நடை 2018-2019 | 950 |
| 9 | 22 | 00046 | வேணு கோபால்சாமி நடை 2018-2019 | 1356/- |
| 10 | 23 | 001403 | போலீஸ் லைன் "E"பைப் 2018-2019 | 5138/- |
| 11 | 23 | 001404 | போலீஸ் லைன் "E"பைப் 2018-2019 | 5138/- |
| 12 | 23 | 001405 | போலீஸ் லைன் "E"பைப் 2018-2019 | 6852/- |
| 13 | 23 | 001406 | போலீஸ் லைன் "E"பைப் 2018-2019 | 6852/- |
| 14 | 23 | 1406 | போலீஸ் லைன் "E"பைப் 2018-2019 | 6852/- |
| 15 | 27 | 00167 | PWD | 3906/- |
| 16 | 27 | 00171 | PWD | 6584/- |
| 17 | 27 | 00172 | PWD | 22779/- |
| 18 | 27 | 00173 | PWD | 6528/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | 27 | 00175 | PWD | 2968/- |
| 20 | 27 | 00176 | PWD | 1534/- |
| 21 | 27 | 00363 | PWD | 4706/- |
| 22 | 27 | 00364 | PWD | 16926/- |
| 23 | 27 | 00365 | PWD | 3338/- |
| 24 | 27 | 00366 | PWD | 13494/- |
| 25 | 27 | 00949 | PWD | 2386/- |
| 26 | 27 | 00950 | PWD | 2386/- |
| 27 | 27 | 00951 | PWD | 1396/- |
| | | | மொத்தம் | 229229/- |

அலுவலகக்குறிப்பு :

அரசாணை எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19.11.19-ன்படி 2018-2019 ம் ஆண்டில் சீராய்வில் நிறுத்தி வைத்து பழைய வரிவிதிப்பு அடிப்படையில் சொத்துவரி வசூலிக்க தெரிவிக்கபட்டதை தொடாந்து கணினி வாயிலாக சீராய்வில் உயர்த்தப்பட்ட சொத்துவரியினை குறைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 2018-2019-ம் ஆண்டின் வசூலிக்கப்படாத, உயர்த்தப்பட்ட சொத்துவரியினை கேட்பு பதிவேட்டில் எழுதப்பட்டதை அரசாணையின்படி 2020-2021-ம் ஆண்டில் கேட்பு பதிவேட்டில் உள்ள நிலுவை சொத்துவரி ரூ.229229/- ஐ பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 929/2018/அ1)

தீர்மானம் எண் : 653 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வாகனங்கள் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், பேருந்து நிலையத்தில் கட்டணம் கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம், பேருந்து நிலையத்தில் ஒளி, ஒலி விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம், பழைய பேருந்து நிலைய கடை எண்ணிக்கை -8, கச்சேரிவீதி, சத்திரக் கடை எண்ணிக்கை - 25, புதிய பேருந்து நிலைய கடை எண்ணிக்கை -5 ஆகியவை நகர்மன்ற தீர்மான எண். 893, 948, 949,255 மற்றும் முன் அனுமதி தீர்மானங்களின் படி மேற்கண்ட எண்ணிக்கை கொண்ட கடை இனங்களை 23.07.2021-ஆம் தேதி பொது ஏலம் விடப்பட்டதில கீழ்க்கட்ணடவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறுப்பட்டது. கீழ்கண்ட இனங்கள் மட்டும் அரசாணை எண்.92-ன் படி, சந்தை மதிப்பு மற்றும் சர்கார் மதிப்பு மற்றும் குழு நிர்ணயித்த மன்ற அனுமதியின் படி ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக வரப்பெற்றுள்ளதால் இதனை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | ஏலதாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்ற மாத வாடகை ரூ. | உரிமக் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலையம் | 6 | செ.பூங்கொடி | 8,740/- | 01.08.2021 முதல் 31.07.2024 வரை |
| 4 | கச்சேரி வீதி சத்திரக்கடை | 37 | த.பாலமுருகன் | 3,100/- | 01.08.2021 முதல் 31.07.2024 வரை |
| 4 | கச்சேரி வீதி சத்திரக்கடை | 38 | சி.பார்த்திபன் | 3,100/- | 01.08.2021 முதல் 31.07.2024 வரை |

அலுவலகக்குறிப்பு :-

I.மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் கடைகள் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இதில் மேற்கண்ட வரிசை எண்.1 முதல் 3 வரை உள்ள கடை இனங்கள் அரசாணை எண். 92-ன்படி மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச மாத வாடகை காட்டிலும் கூடுதலாகவும் சந்தை மதிப்பு மற்றும் சர்கார் மதிப்பு காட்டிலும் கூடுதலாகவும் மாத வாடகை சென்றுள்ளதால் மேற்கண்ட ஏலதாரரின் உயர்ந்தபட்ச மாத வாடகையினை அரசாணை எண். 92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளின் படி உறுதி செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

II.01.08.2021-ஆம் தேதி முதல் கடைகள் உரிமம் உத்திரவிடப்பட வேண்டியுள்ளதால் நகர்மன்ற முன்அனுமதி பெறப்பட்டு மேற்காணும் 3 கடைகளையும் மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 1200/2020/அ3)

தீர்மானம் எண் : 654 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 9

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண். 25-ல் திரு. எஸ்.ஜி.தண்டபாணி, த/பெ. கோபால கிருஷ்ணன் என்பவருக்கு 01.01.2021 முதல் 31.12.2024 வரை உண்டான காலத்திற்கு மாத வாடகை ரூ.17,500/- க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் தனத உடல் நிலை சரியில்லாத காரணத்தால் நாள். 19.06.2021 ஆம் தேதி காலச் சென்று விட்டபடியால் கடையை நடத்த முடியவில்லை என்றும் கடையை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்கிறேன் என்றும் 27.07.2021 ஆம் தேதி கடிதம் வழங்கியுள்ளார். எனவே மேற்கண்ட கடையை நகராட்சி வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின்படி பொது ஏல நிபந்தனைக்குட்பட்டு உரிமத்தினை ரத்து செய்து மறு ஏல விட நடவடிக்கை மேற்கொள்ள 28.07.2021 ஆம் தேதி குறிப்பு வழங்கியுள்ளார். இதனடிப்படையில் புதிய பேருந்து நிலைய கடை எண். 25 ஐ உரிமத்தினை ரத்து செய்து மறு ஏல பொது ஏலம் மற்றும் ஒப்பந்தம்புள்ளி கோருவதற்கும் இவரின் நிலுவை வாடகை மற்றும் பொது ஏல நிபந்தனைகளின்படி ஏற்படும் இழப்பிற்கு அவரது வாரிசுதாரரான மனைவி பி. பங்கஜவள்ளி, த/பெ.எஸ்.ஜி.தண்டபாணி அவரையே முழுபொறுப்பாக்கி நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

புதிய பேருந்து நிலையக்கடை எண். 25- ஐ திரு. எஸ். ஜி. தண்டபாணி, த/பெ. கோபாலகிருஷ்ணன் என்பவரின் கடிதத்தின்படி உரிமக்காலம் முடிவதற்கு முன் கடையை ஒப்படைப்பு செய்வதால் அவரின் உரிமம் ரத்து செய்யப்பட்டும் அதனை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அவர் செலுத்த வேண்டிய வாடகை நிலுவையான அவருடைய வைப்பு நிதியில் சரிகட்டிக் கொள்ளவும் பொது ஏலம் மூலம் ஏற்படும் சகல இழப்பிற்கும் உரிமதாரரின் வாரிசு மனைவியை பொறுப்பாக்கி சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவதற்கும் மன்றம் அனுமதிக்காலம்.

மேலும் முன் அனுமதியின்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 1200/2020/அ3)

தீர்மானம் எண் : 655 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 10

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு பயன்படுத்த தயார் நிலையில் உள்ளது.தற்பொழுது குடியிருப்புகள் மற்றும் வணிக கட்டிடங்களுக்கு கழிவு நீர் குழாய் இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது.இந்நகர் பகுதியில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரை சுத்திகரிப்பு நிலையம் மூலம் மறு சுற்சி செய்யப்பட்ட உள்ளது.மறு சுழற்சி செய்யப்பட்ட நீரினை விவசாய பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தி கொள்ள நகராட்சி பகுதியில் உள்ள விவசாய மக்களுக்கு அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டத்திற்கு தின தந்தி நாளிதழ் நிறுவனத்திற்கு ரூ.4284/- ஐ தொகையினை வழங்க நகர் மன்றத்தின் அனுமதிக்கும் ,ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியல் சேர்த்து கொள்ளலாம்.

(கட்டு எண்.602/2020/இ1)

தீர்மானம் எண் : 656 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 11

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் காலியாகவுள்ள இரு ஒட்டுனர் மற்றும் பொறியியல் பிரிவில் காலியாகவுள்ள ஒரு ஓட்டுனர் பணியிடம் மூன்று ஒட்டுனர் பணியிடங்களை இவ்வலுவலக ந.க.எண். 652/2019/எச்.1 நாள்.30.06.2019 இன்படி 01.07.2019 முதல் 30.06.2020 முடிவடையவுள்ள நிலையில் இப்பணிக்கு மீண்டும் 01.07.2020 முதல் 30.06.2021 லரையிலான காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் பயன்படுத்திக் கொள்ள உத்திரவிப்பட்டு தற்போது பணியாளர்கள் பணிசெய்து வருகின்றனர் மீளவும் ஒரு மாதம் காலம் 01/07/2021 முதல் 31/07/2021 வரையிலான மூன்று ஓட்டுனர்கள் பணிநீட்டிப்பு செய்து பணி தொர்ந்து மேற்கொள்ளப்பட்டு. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை வெர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை மேலும் ஒருமாதம் காலத்திற்கு 01.08.2021 முதல் 31.08.2021 வரை தற்காலியமான முறையில் பணி நீட்டிப்பு செய்து. (Tustus Out Soureing Solutions private Limited) நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் சம்பள விகிதத்தில் ஒரு மாதம் காலத்திற்கான உத்தேச செலவினம் ரூபாய் 62000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு:

1.நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதார நலன் கருதி நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 540/2020/எச்.1)

தீர்மானம் எண் : 657 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 12

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் (outsourcing) தனியார் ஒப்பந்த அடிப்படையில் 1,2,17 முதல் வார்டுகள் 22 வரை பகுதிகளில் 50 துாய்மை பணியாளர் (Outsourcing) முறையில் வி.பி.என்.பில்டர்ஸ் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பார்வையில் காணும் நகர் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.288369/ஜே3 நாள். 04.12.2018ன்படி அனுமதி அளிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பார்வை 2-ல் காணும் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.137/2020/எச்.1 நாள். 05.02.2020 யின்படி பணி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.03.2021 ன் முடிவடைவதால் 01.04.2021 லிருந்து 31.07.2021 வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளிள கோரி நடவடிக்கை மேற்கொள்ளம் வரை மேலும் ஒரு மாத காலம் 01.08.2021 முதல் 31.08.2021 வரை தற்காலிகமான முறையில் பணி நீட்டிப்பு செய்து அதற்கான உத்தேச செலவினம் ரூ. 9,07,000/- க்கு நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : -

1. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.137/2020/எச்.1)

தீர்மானம் எண் : 658 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 13

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் (outsourcing) தனியார் ஒப்பந்த அடிப்படையில் 11,12,23 முதல் வார்டுகள் 27 வரை பகுதிகளில் 55 துாய்மை பணியாளர் (Outsourcing) முறையில் வி.பி.என்.பில்டர்ஸ் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பார்வையில் காணும் நகர் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.288369/ஜே3 நாள். 04.12.2018ன்படி அனுமதி அளிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பார்வை 2-ல் காணும் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.1304/2019/எச்.1 நாள்.26.03.2020 யின்படி பணி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.03.2021 ன் முடிவடைவதால் 01.04.2021 லிருந்து 31.07.2021 வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின்

அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளிள கோரி நடவடிக்கை மேற்கொள்ளம் வரை மேலும் ஒரு மாத காலம் 01.08.2021 முதல் 31.08.2021 வரை தற்காலிகமான முறையில் பணி நீட்டிப்பு செய்து அதற்கான உத்தேச செலவினம் ரூ. 9,97,500/- க்கு நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : -

1. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1304/2020/எச்1)

தீர்மானம் எண் : 659 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 14

தமிழக அரசின் அரசு தலைமைச் செயலாளர்,சென்னை அவர்களின் சுற்றிக்கை கடித ந.க.எண்.5916/எச்.என்.2/2021-1 நாள்.12.05.2021 இன்படி மாநகராட்சி,நகராட்சி,பேரூராட்சி பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைத்துறையச் சார்ந்த சாலைகளில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே உள்ள சாலை மட்டத்தினை உயர்த்துவதால் சாலையின் தன்மை (நடைபாதை, வடிகால் முதலியவை) பாதிக்கப்படுகிறது.மேலும்,மாநகராட்சி எல்லைக்குள் இருக்கும் சாலைகள் ஏற்கனவே இரண்டு அல்லது மூன்று அடுக்குகள் அடர் தார்தளம் (DBM) போடப்பட்டு இருக்கும்.ஆதலால் மாநகராட்சி எல்லைக்குள் இருக்கும் சாலைகளில் மேலும்,ஓர் அடுக்கு அடர் தார் தளம் போட்டு சாலை மட்டத்தை உயர்த்தி வேண்டியது இல்லை.சாலைகளின் மேற்தள கட்டுமானத்தை மட்டும் தேவைப்படும் கனத்திற்கு சுரண்டி எடுத்துவிட்டு (Milling) அதே அளவுக்கு மேற்தளம் இட வேண்டும்.இது வீடுகளுக்குள் நீர் புகுவதைத் தடுக்கும் என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சி பகுதிக்கு உட்பட்ட அன்னையன் வீதி மில் ரோடு -குறுக்கு ரோடு 1,2 மற்றும் 3 போயர் வீதி ஆகிய பகுதியில் உள்ள சாலைகள் தற்பொழுது சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ளப்படும் போது சாலை மட்டத்திலிருந்து 0.30 பிக்கிங் பணி மேற்கொள்ளப்பட்டது. திட்ட மதிப்பீட்டில் 0.10 m அளவிற்கு Wet Mix Macadam வழிவகை செய்யப்பட்டுள்ளது.சாலைகள் பிக்கிங் செய்த முன்பு மிகவும் பள்ளம் ஆகிவிட்டது.எனவே,ஏற்கனவே உள்ள மட்டத்திற்கு சாலை அமைக்க 0.10 m thickness அளவிற்கு GSB தேவைப்படுகிறது.எனவே,மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மதிப்பீடு **ரூ.4.60 இலட்சம்** ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியல் சேர்த்து கொள்ளலாம்.

(ந. க. எண். 100/2016/இ1)

தீர்மானம் எண் : 660 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 15

சத்தியமங்கலம் நகராட்சி 2021-2022 ஆம் ஆண்டு வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி திட்டத்தின் கீழ், இந்நகர் மன்றத்தில் தீர்மானத்தின்படி வருவாய் நிதி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனும தி பெறப்பட்டு, முறையே ஓப்பந்தப்புள்ளி 07.07.2021 தேதி அன்று கோரியதில் வரபெற்ற தலா இரண்டு ஓப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளித் சதவீதம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | Maintaince and Repairs works to pay and use toilet at Bus-stand in Sathyamangalam Municipality | ரூ.450000 | Thiru.R.Arumugam Contractor Sathyamangalam | ரூ.382470/- | மதிப்பீடு தொகையினை விட 0.05 % குறைவு |
| | | | Thiru.Dharmaraj Contractor Sathyamangalam | ரூ.384110/- | மதிப்பீடு தொகையினை விட 0.38 % அதிகம் |
| 2 | Providing Barricading Facilities at | ரூ.300000 | Thiru.R.Arumugam Contractor Sathyamangalam | ரூ.260550/- | ---- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Containment Zones in Sathyamangalam Municipality | | Thiru.Dharmaraj Contractor Sathyamangalam | ரூ.263250/- | ----- |
| 3 | Providing RCC Pipe Culvert at Kartoor Main Road near church and RCC Culvert at Ramani Scholl road in Sathyamangalam Municipality | ரூ.120000 | Thiru.R.Arumugam Contractor Sathyamangalam | ரூ.105255/- | மதிப்பீடு தொகையினை விட 0.23 % குறைவு |
| | | | Thiru.Dharmaraj Contractor Sathyamangalam | ரூ.105774/- | மதிப்பீடு தொகையினை விட 0.49 % அதிகம் |
| 4 | Extension of Pipe Line from Baghyalakshmi Nagar to Susindram Layout in Sathyamangalam Municipality | ரூ.100000 | Thiru.R.Arumugam Contractor Sathyamangalam | ரூ.88039/- | மதிப்பீடு தொகையினை விட 0.20 % குறைவு |
| | | | Thiru.Dharmaraj Contractor Sathyamangalam | ரூ.89403/- | மதிப்பீடு தொகையினை விட 1.34% அதிகம் |
| 5 | Maintaince and Repairs to Water Supply Pumping main bursts and Distrubution main Leakage at Sathyamangalam Municipality | ரூ.500000 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.439783/- | மதிப்பீடு தொகையினை விட 0.12 % குறைவு |
| | | | M/s.VBN Builderrs Contractor Sathyamangalam Municipality | ரூ.447000/- | மதிப்பீடு தொகையினை விட 1.52 % அதிகம் |
| 6 | Maintaince and Repairs Head Works Motors Power Pumps and Submershible Mototrs in all 27 wards at Sathyamangalam Municipality | ரூ.500000 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.440026/- | மதிப்பீடு தொகையினை விட 0.08 % குறைவு |
| | | | M/s.VBN Builderrs Contractor Sathyamangalam Municipality | ரூ.445120/- | மதிப்பீடு தொகையினை விட 1.08 % அதிகம் |
| 7 | Providing BT Surface UGSS Scheme omitted portion at Forest Depo main Road Dhanalakshmi mandapam Nirmala Theatre & Kullankaradu Cross Street in Sathyamangalam Municipality | ரூ.620000 | M/s.VBN Builderrs Contractor Sathyamangalam Municipality | ரூ.534975/- | மதிப்பீடு தொகையினை விட 0.12 % குறைவு |
| | | | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.537252/- | மதிப்பீடு தொகையினை விட 0.43 % அதிகம் |

அலுவலககுறிப்பு-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட அட்டவணையில் வ.எண்.1 மட்டும் Thiru.Dharmaraj, Contractor Sathyamangalam, மற்றும் 2 முதல் 4 வரை மட்டும் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ஆறுமுகம் ஒப்பந்ததாரர்,சத்தியமங்கலம்,வ.எண்.5 மற்றும் 6 வரை மட்டும் M/s.Vino Constructions Contractor Bhavani Sagar,வ.எண்.7 மட்டும் M/s.VBN Builderrs Contractor Bhavani Sagar ஆகியோரிகளின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

(கட்டுஎண். 100/2016/இ1)

தீர்மானம் எண் : 661 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 16

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மூ.மு.எண்.44923/99/எப்1 நாள் 6.12.1999-ன்படி சத்தியமங்கலம் நகராட்சிக்கு குழாய் ஆய்வாளர்-1, தலைமையிட உதவியாளர்-2, வடிகட்டி படுகை இயக்குபவர்-4 ஆகிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு தொடர் அனுமதி 30.9.2021 வரை நகர்மன்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியிடத்திற்கு 1.10.2021 முதல் 30.9.2022 வரை கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்படி பணியிடங்கள் குடிநீர் பிரிவிற்கு அத்தியாவசியமாக தேவைப்படுவதால் 1.10.2021 முதல் 30.9.2022 வரையிலான காலத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 62/2013/சி1)

தீர்மானம் எண் : 662 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 17

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மூ.மு.எண். 14547/2004/எப்4 நாள் 21.2.2005-ன்படியும், அரசாணை எண். 285 நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 5.11.1996ன்படியும், இந்நகராட்சிக்கு மின்விளக்கு பராமரிப்பு பணிக்காக மின்பணியாளர் நிலை-2 பணியிடம்-1 தோற்றுவிக்கப்பட்டு தொடர் பணிநீடிப்பு ஆணை பெறப்பட்டு வருகிறது. அதன்படி 30.09.2021 நகர்மன்ற வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியிடத்திற்கு 1.10.2021 முதல் 30.9.2022 வரை கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்காணும் பணியிடம் தெரு மின்விளக்கு பராமரிப்புக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவதால் 1.10.2021 முதல் 30.9.2022 வரை நீட்டிப்பு செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 60/2013/சி1)

தீர்மானம் எண் : 663 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 18

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு கொசு ஒழிப்பு பணியில் பயன்படுத்தப்பட்டு வரும் VEHICLE MOUNT FOGGING MACHINE பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள 20.07.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று நிறுவனங்கள் விலைப்புள்ளிகள் அளித்துள்ளன.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலை ரூ (GST உட்பட) |
|---|---|---|
| 1 | THREAD FAST,<br>29, DHANDAPANI STREET,<br>EKATHUTHANKAL,<br>CHENNAI – 97. | ரூ.15500/- |
| 2 | SHAKTHI INDUSTRIES,<br>46/E, VETRI VINNAYAGAR KOIL STREET,<br>HANNUMANTHPUTHRI,<br>CHENGALPET. | ரூ.14850/- |
| 3 | OM SAKTHI TECH SERVICES,<br>2, WIRELESS STATION CROSS STREET,<br>PORUR CHENNAI - 125. | ரூ.14200/- |

இவற்றில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு :

1. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள OM SAKTHI TECH SERVICES, CHENNAI-125 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 446/2021/எச்.1)

தீர்மானம் எண் : 664 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 30.07.2021

பொருள் : 19

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டு வரும் டாடா ஏசி வாகனம் TN36AM5508 தகுதிச்சான்று பெற்று தர பணியினை மேற்கொள்ள 18.06.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு நிறுவனங்கள் விலைப்புள்ளிகள் அளித்துள்ளன.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலை ரூ (GST உட்பட) |
|---|---|---|
| 1 | Sri Bagyalakshmi Motor Works Erode – 638003. | ரூ.29,900/- |
| 2 | Murugan Autos Erode - 638003. | ரூ.32,500/- |

இவற்றில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு :

1. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Sri Bagyalakshmi Motor Works Erode என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 352/2021/எச்.1)

தீர்மானம் எண் : 665 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 30.07.2021

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.